REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மார்கழி 15உ சனி (29—12—56) ★ ★ வெளியீடு: மார்கழி 16உ ஞாயிறு (30—12—56) [இதழ் 174

## சம்பள நிர்ணய போர்டுகள்

'தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சில பொறுக்கி எடுத்த தொழில்களுக்குக் கூலி நிர்ணய 'போர்டு'கள், அமைக்கப்படவேண்டும்' என்று, இரண்டு நாட்கள் நடைபெற்று முடிவுற்றுள்ள தொழிலாளர் இலாகா மந்திரிகள் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்.

அடுத்த ஆண்டு பிப்ரவரி திங்களுக்குள் பருத்தி ஆலை, இரும்பு, உருக்கு, சணல், தோட்டம், மின்பொறியியல் தொழில்களுக்கு ஊதிய போர்டுகள் அமைக்கப்படலாமெனத் தெரிகிறது.

நிரந்தரமான தொழில் நீதிமன்றங்கள் நிறுவப்படவேண்டும் என்றும் சிபாரிசு செய்யப்பட்டதாம்.

# கழகத்தை பணத்தால் வென்றுவிட முடியாது

## சர்க்கஸ்காரனுக்கு சிங்கத்தால் சாவு—காங்கிரசிற்கு பணக்காரராலேயே சாவு!

## காங்கிரசாரிடம் பணம் இருக்கலாம்; ஆனல் அந்தப் பணம் பலம் கொண்டதல்ல!

## சென்னைக் கூட்டத்தில் அண்ணு எச்சரிக்கை

"மழை பெய்துகொண்டிருக்கிறது; என்றாலும், அதனைப் பொருட்படுத்தாமல், நீங்கள் நின்று கொண்டே கருத்துக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அதே போலத்தான் கழகத் தோழர்களும், வரப்போகும் பொதுத் தேர்தலின்போது தோன்றக் கூடிய கஷ்டங்களைப் பொருட்படுத்தாமல், கட்டுப்பாடு குலையாமல், பொறுமையோடு பணியாற்ற வேண்டும்.

### ஆற்றலுண்டு; எனவே, நம்பிக்கையுண்டு

"கழகத் தோழர்களிடம் ஆற்றல் நிரம்ப உண்டு; அவர்களது ஆற்றலில் எனக்கு நிரம்ப நம்பிக்கையிருக்கிறது. அவர்களது ஆற்றல், வரப்போகும் தேர்தலில் கழகத்திற்கு நல்ல பெருமையையும் புகழையும், வெற்றியையும் தேடித் தரும் என்பதில் சந்தேகமே இல்லை.

### பணபலம் அவர்களைக் காப்பாற்றிவிடுமா?

"காங்கிரசார், தேர்தலில், தங்களுடைய பண பலத்தையே நம்பியிருப்பதாக எனக்கு முன் பேசிய நண்பர்கள் கூறினர். ஆனல் காங்கிரசாரிடம் பணம் இருக்கிறதே தவிர, அந்தப் பணத்திற்கு அதிகமாகப் பலம் இல்லை என்பதை நான் கூற விரும்புகிறேன்

"பணம் மட்டும் காங்கிரஸைத் தேர்தலில் காப்பாற்றிவிடும் என்று அவர்கள் கருதக்கூடாது.

"காங்கிரசார், வாக்காளருக்குப் பணம் தருவதாக வைத்துக்கொள்வோம்; வாங்கும்போதே, வாக்காளருக்குத் தெரியவேண்டும்—'அந்தப் பணம் எத்தனை குடும்பங்களைக் கெடுத்ததால், கொடுப்பவரிடம் குவிந்தது; எத்தனை அநியாய வட்டியின் மூலம் கிடைத்தது; எத்தனை ஏழை எளியோரை வாட்டியதால் கிடைத்தது'—என்பவை எல்லாம்!

"நாணயவான்களுக்கு கைகூசும்; நேர்மையாளர்களுக்குக் கைநடுங்கும்—அந்தப் பணத்தை வாங்கும்போதே!

"தந்திரக்காரர்களுக்குக் கொஞ்சம் கை நீளலாம்; ஏனெனில், 'இந்தப் பணக்காரனிடம் இப்போது கறந்தால்தானே உண்டு—இல்லாவிட்டால், வேறெப்போது இவனிடமிருந்து பணத்தைக் கறக்க முடியும்?'—என்று எண்ணுவதால்! அவர்களைப் பற்றி நமக்குக் கவலை இல்லை; ஆனல் பணத்தால் மட்டுமே காங்கிரசார் தேர்தலில் வெற்றி பெற்றுவிடலாம் என்று எண்ண வேண்டாம்.

### அனுபவம் கற்றுத் தரும் பாடம்!

'காங்கிரசாரைவிட அதிகமாகத்தான் பணம் செலவிட்டுப் பார்த்தனர், ஜஸ்டிஸ் கட்சியினர்! ஆனல், தோற்றனர், தேர்தலில்! காரணம் என்ன? அப்போது மக்கள் உள்ளத்தில், வெள்ளைக்காரருக்கு எதிரான விடுதலை ஆர்வம் பொங்கி வழிந்தது. அதனல், 'எத்தனைதான் ஜஸ்டிஸ் கட்சி பணக்காரக் கட்சியானாலும் அவர்களை ஆதரிக்க மாட்டோம்' என்று மக்கள் கூறினர். அதே நிலைதான் இப்போதும்! காங்கிரஸ் பணக்காரக் கட்சியாகயிருக்கலாம்; ஆனல், தி. மு கழகம், ஒரு விடுதலை இயக்கம்; எனவே, காங்கிரசார் பணத்தாலேயே தேர்தலில் வெற்றி பெற்றுவிடலாம் என்று மனப்பால் குடிக்க வேண்டாம்!

### உதாரணம் வேண்டுமா?

"உதாரணத்தின் மூலம் இதனை விளக்கமுடியும்.

"மந்திரியாகியுள்ள இராமசாமிப் படையாச்சி, சேவல் பெட்டியில் தேர்தலில் நின்ற காலம்; அப்போது கோயங்கா என்ற வடநாட்டு முதலாளி, நகரத்தில் பல பத்திரிகைகளின் உரிமையாளர். அவர் திண்டிவனம் தொகுதியில் நின்றார். பணத்தைத் தண்ணீராக வாரி இறைத்தார்; என் நினைவு சரியாக இருக்குமானல்—'அவரை ஆதரியுங்கள்,' என்று ஆகாயவிமானத்திலிருந்து நோட்டீஸ்களை வீசினார்கள்; ஆனலும், 'கோடீஸ்வரரான கோயங்கா வேண்டாம்; குறள் வைத்திருக்கும் முனுசாமியே போதும்,' என்று கூறினர் மக்கள்! இந்தச் சம்பவம், 'பணம் மட்டும் தேர்தலில் வெற்றிபெறப் போதுமானதல்ல,' என்பதைக் காட்டவில்லையா?

'பணத்தால் ஒரு கட்சியை அழித்துவிடமுடியும் என்றால், காங்கிரசை வெள்ளைக்காரன் சவரனல்—தங்கத்தால்— வெள்ளியால் அழித்திருப்பானே?

'எனவே, காங்கிரசார் நமது கழகத்தை பணம்கொண்டு அழித்துவிடலாம் என்று கனவுகாண வேண்டாம்.

### மக்களின் நலனுக்கா 'அவர்கள்' பாடுபடுவர்?

"இந்தக் கூட்டத்தில் ஒரு பெரிய பணக்காரன் பேசுவதானல் மழை இலேசாகத் தூற ஆரம்பித்ததுமே, 'கார் எங்கே,' என்று தேடிக்கொண்டு ஓடுவதைத்தானே நீங்கள் பார்க்கமுடியும்? இப்படி நனைந்துகொண்டு பேசினல், 'ஆஸ்த்துமா' வருமோ, 'இன்புளுயன்சா' வருமோ என்றல்லவா அவர்கள் பயப்படுவார்கள்? அப்படிப்பட்ட பணக்காரர்கள் தேர்தலில் வெற்றிபெற்றால், மக்களின் நலனுக்காகப் பாடுபடுவார்களா என்பதை வாக்காளர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

"தேர்தலில் ஈடுபடவிருக்கும் பணக்காரர்களான காங்கிரசார், இப்போதே வட்டித்தொகையையும், வாடகைப் பணத்தையும் வசூல் செய்துகொண்டிருக்கக் கூடும். அவர்கள் தங்களின் பணத்திற்கு தேர்தலில் சக்தியில்லை என்பதையும், அவர்களது 'பண பல'த்திற்கு நாங்கள் ஒன்றும் பயப்படமாட்டோம் என்பதையும் உணரவேண்டும்.

### மனம் வெதும்பட்டும்!

"தேர்தலின்போது, பணம் தரும் காங்கிரசாரைப்பற்றி மக்கள் நன்றாகச் சிந்தித்து அறிய வேண்டும். அவர்கள் உங்களுக்குத் தரும் பணம் உங்களிடமிருந்து சுரண்டப்பட்டது; உங்கள் உழைப்பால் உருவானது என்பதை எண்ணி, மக்கள் மனம் வெதும்ப வேண்டும் உங்களுக்கே உரியது, உங்களிடமிருந்து களவாடப்பட்டதால், வேறொரு உழைக்காதவரிடம் சேர்ந்திருக்கிறது என்பதை வாக்காளர்கள் உணரவேண்டும்.

### மறந்துவிடாதீர்!

'திருவிழாக் காலத்தில் காணமல் போய்விட்ட ஏழைத் தாயின் குழந்தை செல்வந்தர் வீட்டில் வளர்ந்து வருகிறான். 15 ஆண்டுகளுக்குப் பிறகு எப்படியோ அவனைச் சந்தித்த தாய், 'மகனே, நான்தான் உன் தாய்' என்றால். 'இல்லை, இல்லை; என் தாய் இப்படி அவலக் கோலத்தில் இருக்கமாட்டாள்' என்றுதான் முதலில் மிரட்டுவான்; பின்னர், உண்மையை அறிந்தால், தாயிடம் வந்து சேர வேண்டியவனே அந்தப் பிள்ளை! அதுபோலத்தான், உங்கள் செல்வம் பணக்காரரிடத்தில் இருக்கிறது; ஆனலும், அது உங்களுக்கு உரியது என்பதை மறந்துவிடாதீர்கள் என்று வாக்காளருக்குக் கூற விரும்புகிறேன்.

### கடை விரிக்கத் தவறமாட்டார்கள்

"இதை நீங்கள் உணர்ந்து, 'உன்னிடம் உள்ள பணம் என்னுடைய உழைப்பால் வந்ததே' என்று, கேட்கிற அறிவும் துணிவும் பெறும்வரை, காங்கிரஸ் பணக்காரர் கடை விரிக்கத்தான் செய்வர்!

"துணிவு பெற்றுவிட்டீர்களானல், ரஷ்யாவில் சார் மன்னனும், பிரான்சில் லூயி மன்னனும் கடைகளைக் கட்டிக்கொண்டதுபோல, இந்த நாட்டுப் பணக்காரரும் கடையைக் கட்டிக்கொள்வார்கள்!

### காரணம் என்ன?

"காங்கிரசிடத்தில் இன்று பணக்காரர்கள் தஞ்சம் புகுந்திருப்பதற்குக் காரணம் என்ன?

"இவர்களை அண்டிப் பிழைத்தால்தான், தங்கள் பணத்திற்குப் பாதுகாப்பு கிடைக்கும் என்ற அச்சத்தாலும் ஆசையாலும்தான்; உள்ளன்போடு காங்கிரஸை ஆதரிப்பவர்களல்லர், பணக்காரர்கள்!

"காமராசர் இந்தப் பணக்காரர்களை வைத்துக்கொண்டு நமக்குப் பயம் காட்டப்பார்க்கிறார்.

"ஆனல்...? சர்க்கஸ்காரன், சிங்கத்தை அடக்குகிறான்; ஆட்டுக் குட்டியை முன் நிறுத்தினலும் சிங்கம் ஒன்றும் செய்யாமல் இருக்கிறது; சர்க்கஸ்காரன்மீது கொண்ட அன்பால் அல்ல சிங்கம் அடங்கி இருப்பது; சர்க்கஸ்காரனுக்கு, அவன் அடக்கி வைத்திருக்கும் சிங்கத்தாலேயே சாவு என்பார்கள்; அதுபோலத்தான், காங்கிரசுக்கும் அது கொண்டிருக்கும் பணக்காரர்களாலேயே சாவு ஏற்படப்போகிறது,"

என்று, அண்ணு அவர்கள், 26—12—56 அன்று சென்னை இராயப்பேட்டை தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

## நிலச்சீர்திருத்தம் தீவிரமாக நடைபெறவில்லை!

### விரிவான அடிப்படையில் நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்

கட்டாக், டிச 28—

"மிக விரிவான அளவில் நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்; இதற்காக மக்களின் உயர்ந்த ஆதரவு பெற்ற இயக்கம் ஒன்றும் வேண்டும்; இல்லாவிட்டால், சோஷலிச சமுதாய அமைப்பிற்கு விவசாயத் துறையினரின் ஆதரவு கிடைக்காது.

"விவசாயத் திட்டத்திற்கு அடிப்படையானதாயிருக்கிற நிலச் சீர்திருத்தம், எதிர்பார்க்கிற அளவு தீவிரமாக நடைபெறவில்லை."

என்று, பிரபல பொருளாதார நிபுணரான பேராசிரியர் டி. ஜி. கார்வே மாநாடு ஒன்றில் கூறியிருக்கிறார்.

## முன்னுள் முதன் மந்திரிக்கு 5 ஆண்டு கடுங்காவல் தண்டனை

### பல இலட்சம் ரூபாய் மோசடி வழக்கில் தீர்ப்பு

கோல்காபூர், டிச. 28—

ரூ. 9,52,000 வரை மோசடி செய்ததாக, கோலாப்பூர் மாநில முன்னுள் முதன் மந்திரி ஒருவருக்கு, கோலாப்பூர் நீதிபதி 5 ஆண்டுக்கடுங்காவல் தண்டனையும், ரூ.15,000 அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்திருக்கிறர் எனத் தெரிகிறது.

இப்போதைய கோலாப்பூர் மன்னரான சத்திரபதி ஷாஹஜராஜே என்பார், தமது மனைவி பத்மராஜே என்பாரின் பெயரில் டிரஸ்ட் ஒன்றை நிறுவியிருந்தார்; அந்த 'டிரஸ்ட்'டிற்குச் சொந்தமான பணத்தில் ரூ. 9,52,000 வரை மோசடி செயததாக முன்னுள் முதன் மந்திரியான டி. ஏ. சாவே என்பார்மீது வழக்குத் தொடரப்பட்டது.

டிரஸ்டின் நிர்வாக டைரக்டர்களுள் ஒருவராகவும், கோலாப்பூர் பாங்கியின் தலைவராகவும் இருந்த காலத்தில், டிரஸ்டிற்குச் சொந்தமாக மொத்தம் ரூ. 15 இலட்சம் இருந்தது எனவும், அதில் மேற்கண்ட தொகையை இந்த முன்னுள் மந்திரி தன்பெயருக்கு மாற்றிக்கொண்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி நம்பிக்கைத் துரோகம் செய்ததற்காக மூன்றாண்டுக் கடுங்காவலும் (409 இ. பி. கோ.) ரூ 10,000 அபராதமும், கட்டத்தவறினல் மேலும் ஓராண்டுக் கடுங்காவலும், போலி தஸ்தாவேசுகள் தயாரித்து உபயோகித்ததற்காக; இரண்டாண்டுக் கடுங்காவலும், ரூ 5,000 அபராதமும்—கட்டத் தவறினல் மேலும் ஆறுமாத கடுங்காவல் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார் என்று தெரியவருகிறது.

## 16 நஷ்ட ஈடு மதிப்பீடு குழுக்கள் நியமனம்

பிரிட்டிஷ் — பிரெஞ்சு — இஸ்ரேல் தாக்குதலின் காரணமாக எகிப்துக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை மதிப்பிட 16 குழுக்களை எகிப்திய அரசாங்கம் அமைத்துள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில், இந்தியாவில் கால் நடைகளின்மொத்த எண்ணிக்கை 1½-கோடியாக உயர்ந்திருக்கிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 29—12—'56 சனி

# கடமையாற்றுவீர்!

தொழில்துறை அபிவிருத்தியில், டில்லிப் பெரியவர்கள் தென்னாட்டுக்கு இழைத்து வரும் கொடுமையான அநீதிகளின் மூலம், நியாயத்தை எத்தனை மூர்க்கத்தனமாக அவர்கள் கற்பழித்துள்ளார்கள் என்று நாம் இங்கு பன்முறை எடுத்துக்காட்டியுள்ளோம்.

தொடர்ந்தாற்போல் அவர்கள் பல ஆயிரம் கோடிரூபாய்க்கான திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி வருவதில், 'தென்னாடு — திராவிடம் — தமிழகம் இன்னும், 'இந்தியா' என்ற அரசியல் அமைப்பிற்குட்பட்டுள்ள பூபாகத்தில்தானிருக்கிறது; தனியுரிமை பெற்று விடவில்லை. 'அந்த நிலப்பரப்பும் நமது ஆட்சிக்கு—ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசமே' என்ற நினைவே வடநாட்டுப் பெரியவர்களுக்கு இல்லா தொழிந்துவிடுகிறது.

தொழிலபிவிருத்தித்துறையில் தென்னாடு, வேண்டுமென்றே பழி தீர்க்கும் நோக்குடன், பகை சாதிக்கும் போக்குடன் புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்ற உண்மை, நாளுக்குநாள் பலரது உள்ளத்தையும் குடைய ஆரம்பித்துள்ளது.

இந்த நாட்டு மக்களின் நலனில் இருதயசுத்தியான அக்கறைகொண்டவர்கள், டில்லியின் இந்த அநியாயத்தை, இலைமறை காய்மறையாகவேனும், தங்களுடைய சொற்சாதுரியத்தால் பட்டும்படாமலும் எடுத்துரைத்துவருகின்றனர்.

தென்னாடு தொழில்துறை அபிவிருத்தியில் பின் தங்கிக் கிடக்கிறது—வடவரால் அலட்சியப்படுத்தப்படுகிறது—ஐந்தாண்டுத் திட்டங்கள் வடநாட்டை மட்டுமே வாழ்விக்கும் நோக்குடன் தயாரிக்கப்படுபவை என்ற உண்மைகளை ஓரளவேனும், நமது மாற்றுரும் இதர நல்லறிவாளர்களும் உணருமாறு செய்த பெருமை, திராவிட மக்களின் விடுதலை இயக்கமான நமது கழகத்திற்கு நிச்சயம் உண்டு.

வடநாட்டுப் பெரியவர்கள் சென்றுகொண்டிருக்கும் பாதை, தென்னாட்டவரை நிரந்தரமான அடிமைகளாக வைத்திருக்க நினைக்கும் ஏகாதிபத்தியப் பாதை என்பதை அவர்களது இரு ஐந்தாண்டுத் திட்டங்களும் உலகுக்கும் சாஸ்திரீயமான அரசியல் கற்றவர்களுக்கும் மட்டுமின்றி, சாதாரணமான அரசியல் தெரிந்தவர்களுக்கும் தெளிவாகச் சொல்லிக்கொண்டிருக்கின்றன.

தொழில் துறை அபிவிருத்தியில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதற்கு நாம் காட்டும் காரணம், வேண்டுமானால் சில 'அகில இந்தியாக்'களுக்கு பிடிக்காமலிருக்கலாம்; ஆனால் 'புறக்கணிக்கப்பட்டிருக்கிறது' என்ற உண்மையைக்கூட அல்லவா, நிதி மந்திரி சுப்பிரமணியம் போன்றவர்களுக்கு வெளியிடங்களில் ஒப்பினாலும், சட்டசபையில் ஒப்ப அச்சமாயிருக்கிறது!

'இந்தக் குற்றச்சாட்டு ஆதாரமற்றது' என்று கூறத் துணிந்தாரே, கனம் சுப்பிரமணியம் சட்டசபையில்! அந்த கனம், நாம்தான் இந்தக் குற்றச்சாட்டை எழுப்புகிறோம் என்பதை சற்று மறந்து, கீழ்க்காணுபவற்றை உற்று நோக்கட்டும்:—

"சென்னை மாநிலத்தைத் தொழில் துறையில் முன்னேறும் வகையில் சில கனரகத் தொழில்களையேனும் நிறுவ வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்."

"இரண்டாம் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டிருக்கிற கனரகத் தொழில்களில் ஒன்றுகூட சென்னை மாநிலத்தில் நிறுவத் திட்டமிடப்படவில்லை."

—இந்த வாசகங்கள், மதுரை-முகவை மாவட்ட வர்த்தகக் கழகத்தினர், டில்லி மந்திரி மனுபாய் ஷா என்பாரிடம் தந்துள்ள மகஜரில் காணப்படுவதாகும்.

"தொழில் துறை அபிவிருத்தியில் தென்னாடு படுமோசமாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது; இங்கு பல்லாயிரக் கணக்காக தொழிற்சாலைகள் அமைத்தாக வேண்டும். இதற்கு சென்னை சர்க்கார் டில்லியுடன் கடுமையாகப் போராடியாக வேண்டும்."

—இது, சென்னைத் தொழிலதிபர் கடந்த 21-ந் தேதியன்று திருச்சியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டதாகும்.

வர்த்தகக் கழகத்தவர், மத்திய கனரகத் தொழில் மந்திரியிடம் கருணை மனு சமர்ப்பிக்கிறார்கள்.

தொழிலதிபரோ, மின்சார ஊழியர்களை — தொழிலாளர்களைக் கூட்டி வைத்துக்கொண்டு, 'டில்லியுடன் சென்னை சர்க்கார் போராட வேண்டும்' என்று குரல் கொடுக்கிறார்.

இவர்களெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தவர் என்று, எந்தப் புத்திசாலியும் சொல்லிவிட முடியாதே!

நிதியமைச்சர் கனம் சுப்பிரமணியம், 'இவர்களும் தேர்தலுக்காகத்தான், இந்த கோஷங்களை எழுப்புகிறார்கள் என்று கூறி, தனது வடநாட்டு எசமானர்களது முகத்தின் ஏகாதிபத்திய இலட்சணம் தெரியாமல் செய்துவிட, 'பவுடர்' பூசிவிடலாம் என்று கருதுகிறாரா? இடைவிடாமல் புண்படுத்தப்பட்டுவரும் திராவிடரின் இதயத்தை, சுப்பிரமணியம் போன்ற 'கனம்'கள் மேலும் மேலும் 'பதம்' பார்ப்பது, அவர்களுக்கே ஆபத்துக்களைத் தேடித் தருவதாகும் என்று எச்சரிக்க விரும்புகிறோம்.

இங்குள்ள வர்த்தகக் கழகத்தினர், 'தொழில் அமைத்துத் தாருங்கள்' என்று 'மனு'ப் போடுகிறார்கள்.

'மாநில' சர்க்கார் டில்லியுடன் போராட வேண்டும்' என்று குரல் கொடுக்கிறார்கள்!

ஆனால், அசாம் மாநிலத்தில், 'எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை இங்கு துவங்காவிட்டால், 25,000 தொண்டர்களைத் திரட்டி 'சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்துவோம்,' என்று எச்சரிக்கிறார்கள்.

அசாம் மக்கள் பேசுகிற பாஷைதான் தனக்குப் பிடித்தமானது என்று கனம் நிதி மந்திரி கருதுவாரானால், வடவரின் அதியுச்சமான கொடுமைகளால் படிப்படியாகப் பொறுமை இழந்து வரும் திராவிடர்கள், எப்படி நடந்து கொள்வார்கள் என்பது நமக்குத் தெரியாது. திராவிடருக்கு—தமிழருக்கு நாம் சொல்லக் கூடியதெல்லாம் — வடவரின் கொடுமைகளையும் அவர்களுக்குத் துணைபோகும் சென்னை 'கனம்'களின் மானமற்ற போக்கையும் ஆக்கபூர்வமாகக் கண்டிப்பதற்குச் சரியானதோர் வாய்ப்பு, 'பொதுத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது; கொடுமைகளை நினைவில் கொண்டு கடமையாற்றுங்கள்' என்பதுதான்!

# சுமத்திராவில் 'சுதந்திர எழுச்சி'!

## மத்திய சர்க்காருக்கு எதிராக மூன்று மாநிலங்களில் 'புரட்சி'

## 'புரட்சி' இராணுவம் சர்க்காரைக் கைப்பற்றியுள்ளது!

ஜகார்தா, டிச. 27—

இந்தோனேஷிய மத்திய சர்க்காருக்கு எதிராக, சில தினங்களுக்கு முன் மத்திய வடக்கு சுமத்திரா மாநிலங்களில் எழுந்த சுதந்திர எழுச்சியின் வடிவமான இராணுவப் புரட்சி இப்போது, தெற்கு சுமத்திரா மாநிலத்திலும் பரவி, அந்த மாநிலத்தையும் புரட்சியில் ஈடுபட்டிருக்கும் இராணுவம் கைப்பற்றிக்கொண்டதாக ஜகார்தாவிற்குத் தகவல் கிடைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

### அமைதியான வழியில்...

இந்த இராணுவப் புரட்சி எந்த விதச் சம்பவங்களுமின்றி வெகு அமைதியான வழியில் நடைபெற்றதாகவும், நிலைகள் வெகு சகஜமானதாகவே இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்தோனேஷிய மத்திய சர்க்காருக்கு, தென் சுமத்திராவிலிருந்து எந்தவித வரியும் அனுப்பப்பட மாட்டாது என்றும், மாநில வரி வசூல் அத்தனையும் மாநில மக்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் திட்டங்களுக்கே செலவிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

தென் சுமத்திராவில்தான், இந்தோனேஷியாவின் வெளிநாட்டுக் கரன்சி வருமானத்தில் 40 சதவிகிதம்வரை தருகிற எண்ணெய் ஊற்றுகள் இருக்கின்றன. அங்குதான், 'டச் ஷெல்', மற்றும் 'ஸ்டாண்டர்டு வாக்குவம் ஆயில்' நிறுவனங்கள், இரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை நடத்துகின்றன.

இதுபோன்ற செய்திகள் தரப்படும் நேரத்திலேயே, ஜகார்தாவில் உள்ள மத்திய சர்க்கார், வடக்கு—மத்திய—தெற்கு சுமத்திரா மாநிலங்களில் 'புரட்சி'யை ஒடுக்கி விட்டதாக அறிக்கை வெளியிட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது

### குந்தா திட்டத்திற்கு கனடா கடனுதவி!

புதுடில்லி, டிச. 28—

குந்தா நீர் மின்சாரத் திட்டத்திற்கான ஒப்பந்தம் ஒன்றை கனடா அரசாங்கத்துடன் இந்திய அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது. துவக்கத்தில் இந்தத் திட்டத்திற்கு கனடா ரூ. 10 கோடி கடனுதவி அளிக்குமாம்.

இத்திட்டம் 1961-ல் பூர்த்தியாகும்; இதன் மூலம் 1,80,000 கிலோவாட் மின்சார சக்தி கிடைக்குமாம்.

உதகைக்கு 20 மைல் தூரத்தில் உள்ள நீலகிரி மலைப்பகுதியில் இந்தத் திட்டம் உருவாக்கப்படும் குந்தா முதலிய ஆற்றின் தண்ணீரைக்கொண்டு மின்சாரம் தயாரிக்கப்படுமாம்.

### சட்ட சபைக்கூட்டம் இனி எங்கு நடைபெறும்?

சென்னை, டிச. 27—

தேர்தலுக்குப் பிறகு புதிதாக ஏற்படப்போகும் சென்னை சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 205 ஆகும்; எனவே, சட்ட சபைக்கூட்டம் நடைபெறும் இடத்தை கோட்டைக்கு மாற்ற வேண்டுமா என்பது பற்றி சென்னை அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறதாம்!

### சென்னை நகரத்தில் 12 - ஏழை விடுதிகள்

சென்னை, டிச. 27—

'சென்னை நகரத்தில் மொத்தம் 12 ஏழை விடுதிகள் உள்ளன; பிச்சை எடுத்து பிழைப்பவர்களுக்கு இந்த விடுதிகள் நல்ல உதவிகளைச் செய்திருக்கிறது; மேலும் பல 'ஏழை விடுதிகளை' ஏற்படுத்த சென்னை அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது' என்று நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சட்டசபையில் தெரிவித்துள்ளார்.

### கசப்போ, இனிப்போ யாருக்கு இலாபம்?

சென்னை, டிச. 27—

சர்க்கரைமீது விதிக்கப்பட்ட அதிக விற்பனை வரி மூலம் அக்டோபர்வரை ரூ. 22,34 000—பொது விற்பனை வரிமூலம் ரூ. 6,31,000 வருமானம் கிடைத்துள்ளதாம்.

சென்னை சட்டசபையில் ரெவின்யூ அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

'இப்படி சர்க்கரைமீது வரி விதிப்பது மக்களுக்குக் கசப்பாக இருக்கிறதே' என்று உறுப்பினரொருவர் கூறியபோது அமைச்சர், 'சர்க்கரை கசக்காதே,' என்றாராம்!

உடனே நிதி அமைச்சர் சுப்பிரமணியம் குறுக்கிட்டு, 'புலவர்கள் அப்படிப் பாடியுள்ளார்கள்' என்றாராம்!

### வேலையற்று இருக்கும் இளம் பட்டதாரிகள்

பயிற்சிகள்பெற வாய்ப்பு

திருவனந்தபுரம், டிச. 24—

அடுத்த திங்கள் முதல் கேரள மாநிலத்தில் ஓர் பயிற்சி நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

பட்டதாரிகளில் இளைஞர்களாக உள்ளவர்கள் வேலையற்று இருப்பின் அவர்களுக்கு இந்த நிலையத்தில் ஒரு மாத இராணுவப் பயிற்சியும், ஆறு மாதகாலம் கட்டிட நிர்மாணவேலை, கணக்குப் பதிவு செய்தல், தொழில் சம்பந்தமான கடிதப் போக்குவரத்திற்கான பயிற்சிகள் அளிக்கப்படுமாம்.

திருமணமாகாத இளம் பட்டதாரிகளே இந்தப் பயிற்சி நிலையத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

### 'இராஜிநாமா செய்யமாட்டோம்'

சுமத்திராவில் தோன்றியுள்ள இராணுவப் புரட்சியினை ஒட்டி, அலி சஸ்திரோமித் ஜோஜோவின் கூட்டு சர்க்கார் இராஜிநாமாச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை மந்திரிசபை ஏற்க மறுத்து விட்டிருக்கிறது.

எச்சரிக்கை

கூட்டு மந்திரி சபையில் உள்ள சில கட்சிகள், தாங்கள் மந்திரி சபையிலிருந்து விலகிவிடுவோம் என்று எச்சரித்துள்ளதையும் பொருட்படுத்தாமலேயே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாம்.

இராஜிநாமா

இதன் விளைவாக, தாச்லன் இப்ராஹீம் என்ற மந்திரி (ஐ பி. கே. ஐ. என்ற கட்சியை சேர்ந்தவர்) இராஜிநாமாச் செய்திருக்கிறார் என்றும் கூறப்படுகிறது.

மந்திரி சபை நெருக்கடி முற்றி வருவதாகவும் முன்பே செய்திகள் வந்தன.

### தாழ்த்தப்பட்டோர் நலனுக்கு சென்னையின் திட்டம்

ரூ. 11,20,000 செலவிடப்படும்

தாராபுரம், டிச. 22—

தாழ்த்தப்பட்டோர் நலனுக்கான சென்னை அரசாங்கத்தின் திட்டத்திற்கு மத்திய அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்திற்காக ரூ. 11 20,000 செலவிடப்படும்.

கோவை மாவட்டத்தில் 1 000 வீடுகள் கட்டுவதற்கு ரூ 3 இலட்சம்; சேலம், மதுரை, இராமநாதபுரம் திருநெல்வேலி, கோவை ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 3,000 வீதம் 100 குடி தண்ணீர் கிணறுகள் தோண்ட ரூ. 3 - இலட்சம்; தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களுக்குத் துணைக் கருவிச் சாதனங்கள் வாங்குவதற்கு ரூ. 1½ இலட்சம்; கண்ணாடி வளையல்கள், தோல் சாமான்கள் முதலிய சிறு குடிசைக் கைத்தொழில் வளர்ச்சிக்காக 400 குடும்பங்களுக்கு ரூ. 3,70,000-மும் செலவழிக்கப்படுமாம்.

### அனுமதியின்றியே பண உதவியாம்!

பிரச்சினை டில்லிப் பேரரசின் பரிசிலனையில் இருக்கிறதாம்!

சென்னை, டிச. 26—

இறந்துபோன சில அமைச்சர்களின் குடும்பங்களுக்கு சில மாநில அரசுகள், மத்திய அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் பண உதவி செய்துள்ளதாம்!

அமைச்சர்கள் அரசாங்க ஊழியர்கள் அல்லவென்றும், ஆகவே, இந்தப் போக்கை இந்தியாவின் ஆடிட்டர்—ஜெனரல் எதிர்ப்பதாகவும் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

இந்தப் பிரச்சினை மத்திய அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

### 7 இலட்சம் பேர் சம்பளம் பெற மறுப்பு

ஐதராபாத், டிச. 26—

மத்திய அரசாங்கம், இரண்டாவது சம்பள நிர்ணயக் குழுவை அமைக்காமலிருக்கும் போக்கினைக் கண்டிப்பதற்காக 7 இலட்சம் மத்திய அரசாங்க ஊழியர்கள் ஜனவரித் திங்கள் சம்பளம் பெற மறுப்பதென முடிவு செய்துள்ளனர்.

'ஊழியர்களின் கண்டனத்தைத் தெரிவிப்பதற்கு இது அடையாள போராட்டமாகும்; எனவே, சம்பளத்தை ஒரு சில நாட்கள் கழிந்த பின்னர் பெறுவர்,' என்று மத்திய அரசாங்க ஊழியர் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# வருமானக் குறைவைச் சரிக்கட்ட ஏழை மக்கள் வயிற்றிலடிப்பதா?

## டெல்லியிடம் பணம் கேட்க சென்னை சர்க்காருக்குத் துணிவுண்டா?

## சென்னை வியாபாரிகள் கூட்டத்தில் என். வி. நடராசன் கேள்வி

சென்னை சில்லறை வியாபாரிகள் சங்கச் சார்பில், 27-12-56-ல் பேரம்பூர்-பென்ஷனர் லேன் திடலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என்.வி. நடராசன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது ; எஞ்சிய பகுதி இங்கு தரப்பட்டுள்ளது :—

### சர்க்கார் இழைக்கும் அநீதிகளைக் கண்டிக்க ...

"சர்க்காருக்கு எதிர்க் கட்சியாகத் திராவிட முன்னேற்றக் கழகம் இயங்கி எங்தெந்த வகையில் சர்க்காரின் போக்கினை மக்களிடம் எடுத்துக் கூறிக் கண்டிக்கிறோமோ அதைவிட—நாங்களே தேவையில்லை என்று சொல்லும் அளவிற்கு சில்லறை வியாபாரிகள் இன்று பொதுக் கூட்டம் நடத்தித் தங்கள் வேதனைகளை — உள்ளக் குமுறல்களை உங்களிடம் எடுத்துக்கூறி, தங்களுக்கு சர்க்கார் இழைக்கும் அநீதிகளைக் கண்டிக்க முன்வந்திருக்கிறார்கள்.

### ஒளிவு மறைவின்றி ஒப்புக்கொள்கின்றனர்

"சர்க்கார் பல தீங்குகளைப் புரிந்ததற்கெல்லாம் தாங்களும் உறுதுணையாக இருந்து வந்ததை இன்று அவர்களெல்லாம் ஒளிவு மறைவின்றி ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

### சர்க்கார் செவிசாய்க்கும்?

"அவர்களெல்லாம் இன்று, ஒருமுனை விற்பனை வரி போதும்—பல கட்ட விற்பனை வரி தேவையில்லை என்று சர்க்காரைக் கோருகின்றனர். அந்த வியாபாரிகளெல்லாம் காங்கிரசுக்கு விரோதிகளல்ல— அவர்களிலே, காங்கிரசில் பற்றுக்கொண்டவர்கள் இருக்கிறார்கள்; அதுபோலவே மற்றக் கட்சிகளில் பற்றுக்கொண்டவர்களும் இருக்கிறார்கள். என்றாலும், வியாபாரத் துறையிலே தங்களுக்கிழைக்கப்படும் அநீதியைத் துடைக்க—தங்கள் வேதனைகளைத் தீர்த்துக்கொள்ள ஒன்றுபட்டு முன்வந்திருக்கிறார்கள். அவர்களுடைய வேண்டுகோளுக்குச் செவிசாய்க்க வேண்டியது சர்க்காரின் இன்றியமையாத ஒன்று என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன்.

### கிளர்ச்சி ஆரம்பமானால்...!

"இந்தக் கோரிக்கைக்கு சர்க்கார் இணங்கவில்லையென்றால், வியாபாரிகள் திரண்டெழுந்து 'வரிகொடுக்க மாட்டோம்,' என்று கூறி கிளர்ச்சி ஆரம்பிக்க வேண்டியது அவசியம். அப்படி ஏற்படும்போது கண்டிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகம் வியாபாரிகளுக்குத் தனது முழு ஒத்துழைப்பையும் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### யோசிக்க வேண்டாமா?

"இந்த நாட்டில் விதிக்கப்படும் வரி மூலம் இந்த நாட்டுச் சர்க்காருக்கு எத்தனையோ கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது. இந்தப் பல கட்ட விற்பனை வரியை ஒழித்துவிட்டால், அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை வேறு எந்த முறையில் கிடைக்கச் செய்வது என்று இந்த சர்க்கார் யோசனை செய்யக்கூடாதா?

### துணிந்து கேட்கும் நிலை

"அண்மையில் ஆந்திர சட்டசபையில், முதலமைச்சராக இருந்த கோபால ரெட்டி, வரவு-செலவில் துண்டு விழுந்த $4\frac{1}{2}$ கோடி ரூபாயை — அந்த நட்டத்தைச் சரிக்கட்ட நிலத் தீர்வையாக ரூபாய்க்கு இரண்டணா விதிக்கலாம் என்று கூறினார். ஆனால் என்ன நடந்தது? அதே சட்டசபையில், அப்போது காங்கிரஸ் தலைவராக இருந்த சத்தியநாராயணா, 'ஏற்கனவே வரிச் சுமைக் கொடுமையால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள்; மற்ற எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு இங்குதான் வரி அதிகம்; அப்படியிருக்க, மேலும் அவர்களிடம் வரி போட்டால் அந்தக் கொடுமையை அவர்கள் தாங்கமாட்டார்கள்; ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளைப் போன்றது; அது இந்த சர்க்காரைப் பழி தீர்த்துவிடும்; அதற்கு நான் எப்போதும் உட்படமாட்டேன்' என்று கூறினர்; 'ரூ. $4\frac{1}{2}$ கோடி துண்டு விழுகிறது என்று கூறுகிற சர்க்கார், புகையிலை வரியாக மத்திய சர்க்காருக்கு ரூ. 21-கோடியைக் கொட்டிக் கொடுக்கிறதே; அந்த மத்திய சர்க்காரிடம் கேட்கட்டும் — 'எங்களுக்கு இவ்வளவு துண்டு விழுகிறது; மக்கள் அதிக வரிச் சுமையால் அவதிப்படுகிறார்கள்; எனவே, நிலத் தீர்வையை ரத்து செய்துவிட்டோம்; அந்தத் தொகையைச் சரிக்கட்ட எங்களுக்குப் பணம் தாருங்கள்' என்று கேட்கட்டும் — கோபாலருக்குத் துணிவிருந்தால் நேருவைக் கேட்கட்டும்,' என்று கூறினர். அதுமட்டுமல்ல—'இந்த நிலத் தீர்வை வந்தால் நானே அதை எதிர்ப்பேன்' என்றும் கூறினர்.

### ஏன் டில்லியைக் கேட்கக்கூடாது?

"அதுபோலவேதான், சென்னை சர்க்காரும், இங்கிருந்து டில்லிக்கு ரூ. 50—60 கோடியை அனுப்புகிறார்கள். 'அதில், எங்களுக்கு ரூ. 10 கோடியை ஒதுக்கித்தாருங்கள்' என்று ஏன் இந்த மாநில சர்க்கார் டில்லியைக் கேட்கக் கூடாது? இங்குள்ள மக்கள் ஏழை மக்கள்; பலகட்ட விற்பனை வரி விதிப்பினால் வியாபாரிகள் கஷ்டப்படுகிறார்கள். அதை ரத்து செய்துவிட்டால், அதைச் சரிக்கட்ட மத்திய சர்க்கார் தங்களுக்கு ஏதாவது மானியம் தரும்படி கேட்பதுதானே? இங்கிருந்து புகையிலை வரி, மீன் வரி, கலால் வரி, சுங்க வரி, வருமான வரி—இப்படி பலப் பல வரிகளைக் கொட்டிக்கொடுக்கும் இந்த சர்க்கார், அந்த வரிகளில் ஏதாவது ஒன்றை மத்திய சர்க்காருக்கு அனுப்புவதை ஏன் நிறுத்தக்கூடாது? இப்போது வியாபாரிகள் தெரிவிக்கவேண்டியதெல்லாம் விற்பனை வரியை அடியோடு ஒழித்துவிட வேண்டுமென்பதைத்தான்.

### தொல்லைகள் தீருவதற்கு மார்க்கம் கிடைக்குமே!

"விற்பனை வரியை எடுத்துவிட்டால் ஆண்டுதோறும் ரூ. 10—12 கோடி அதிகம் தேவைப்படும் என்பது உண்மைதான். ஆனால் அதைச் சரிக்கட்ட, மத்திய சர்க்காருக்கு அனுப்பும் பல வரிகளில் ஏதாவதொன்றை மாநில சர்க்கார் தங்களுக்கென்று வைத்துக்கொள்ளலாமே! இந்த விற்பனை வரியை ஒழித்தால், அத்துறையில் ஏற்படும் பலநிறப்பட்ட தொல்லைகளையெல்லாம் தீர்த்துவிடலாமே?

### ஏழை மக்களின் வயிற்றிலா அடிப்பது?

"வருமானம் குறைவாக இருக்கிறதென்றால் மந்திரிகளுக்கும், கவர்னர்களுக்கும், அதிகாரிகளுக்கும் கொட்டிக் கொடுக்கிற கொழுத்த சம்பளத்தைக் குறைக்கட்டுமே? இதற்குப் பதிலாக ஏழை மக்கள் வயிற்றிலா அடிப்பது?

### தொல்லைகளுக்கெல்லாம் எல்லையில்லையா?

'இந்த நாட்டில் யாருக்குத்தான் நன்மை கிடைத்திருக்கிறது? வியாபாரிகள் வரிச் சுமையால் அவதிப்படுகிறார்கள்; மாணவர்கள் ஒரு பக்கம் தொல்லைபடுகிறார்கள்; ஆசிரியர்களிடையே பெரும் அதிருப்தி; இப்படியே மற்றத் துறையில் இருக்கும் எல்லாருமே இந்தக் காங்கிரஸ் ஆட்சியில் தொல்லைப்படுகிறவர்களாகத்தான் இருக்கிறார்கள். நாட்டில் உள்ள ஏழை, பாட்டாளி, நடுத்தர மக்களிடையே இன்று நிம்மதியான வாழ்க்கை இல்லை. இவர்களெல்லாம் என்ன— டாட்டா, பிர்லா போன்றவர்களா? வியாபாரத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு என்ன இலாபம்? வேண்டுமானால் யாராவது ஒரு மந்திரி தனது பதவியை இராஜினமா செய்துவிட்டு சில்லறைக் கடை ஒன்றை வைத்துப் பார்க்கட்டும்; அப்போது தெரியும் வியாபாரிகளின் தொல்லைகள். நமது சர்க்கார் உண்மையிலேயே நாணயமான—நேர்மையான சர்க்காராக இருந்தால், இந்தப் பிரச்சினைகளையெல்லாம் உடனடியாகக் கவனித்திருக்கும்.

### ஒரு சார்பு பிரச்சினையா?

'இந்தப் பிரச்சினை, ஒரு கட்சிப் பிரச்சினை அல்ல; மக்கள் அனைவரையும் பொறுத்த ஒரு சொந்தப் பிரச்சினையாகக் கருதவேண்டும். வியாபாரிகள் கஷ்டப்பட்டால், அதனால் பொதுமக்களும் கூடக் கஷ்டப்படுவார்கள். எனவே, இது எல்லோரையும் பொறுத்த ஒரு பிரச்சினையாகும்.

### கொடுமையின் பலனை அனுபவித்த பின்......!

"ஆச்சாரியார் 1937-ல் முதலமைச்சராக இருந்தபோது, இந்த வரி விதிப்பைக் கொண்டு வந்தபோது முதன் முதலில் நாங்களெல்லாம் எதிர்த்துப் போராடினோம். அன்று, மற்றவர்கள் எங்கள் மீது குறைப்பட்டுக் கொண்டார்கள்; இன்று அவர்களெல்லாம் அந்தக் கொடுமையின் பலனை அனுபவிக்கிறார்கள். அன்று அவர்களெல்லாம் எங்கள் கருத்துக்களை உணராத காரணத்தால் எங்கள் கிளர்ச்சி வெற்றிபெறவில்லை. ஆனால் இன்று அதே கிளர்ச்சியைத் துவங்க வியாபாரிகளே முன்வந்திருப்பதைப் பார்க்கிறோம். இந்தக் கிளர்ச்சியை சர்க்காருக்குத் தொல்லைதரவேண்டுமென்ற நோக்கத்திற்காகச் செய்யக்கூடாது. பிரச்சினையை அணுகவேண்டிய முறையில் — சமாதான முறையில் அணுக வேண்டுமென்றே நாங்கள் கருதுகிறோம்.

### மக்களின் சேவையே தி. மு. கழகத் தொண்டு!

"மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க தி. மு. கழகம் என்றென்றும் தொண்டுசெய்யக் காத்திருக்கிறது. பொதுமக்களின் தொண்டனாக திராவிடமுன்னேற்றக் கழகம் இருந்துவருகிறது. அதனுடைய சீரிய முயற்சிகளுக்குப் பொதுமக்களும் ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறேன்."

---

# 'கோரிக்கைகளை நிறைவேற்ற உயிர் விடவும் தயங்கமாட்டார்கள்'

## சென்னை வியாபாரிகள் கூட்டத்தில் சர்க்காருக்கு எச்சரிக்கை

### வரிப் பளுவை எதிர்த்துப் போராட வியாபாரிகளுக்கு வேண்டுகோள்

சென்னை, டிச. 28—

நேற்று மாலை 6 மணியளவில் சென்னை—பெரம்பூர் ஜி-3 போலீசு நிலையம் அருகிலுள்ள பென்ஷனர் லேன் திடலில், சென்னை சில்லறை வியாபாரிகள் சங்கச் சார்பில், பல கட்ட விற்பனை வரி முறையை எதிர்த்துப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

கூட்டத்திற்கு, மேற்படி சங்கத் தலைவர் திரு. வி. ஜி ராவ் எம்.எல்.சி., தலைமை வகித்தார் அவர் தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது :—

" 1931-முதல், ஆண்டொன்றுக்கு 10,000 ரூபாய்க்கு வியாபாரம் செய்தால விற்பனை வரி செலுத்த வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது; அந்த வரம்பை 30,000 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று கோரப்பட்டது அதற்கு இதுவரை சர்க்கார் செவிசாய்க்கவே இல்லை இப்படிச் செய்வதால் வருமானம் குறையும என்றால், மற்ற ஆடம்பரப் பொருட்களுக்கு வரியை அதிகப்படுத்தட்டும் என்று யோசனையும் கூறினோம்; அந்தக் கொள்கையைச் சர்க்கார் ஏற்றுக்கொண்டாலும் அதைப் பரிபூரணமாகச் செயலாற்ற சர்க்கார் பின்வாங்குகிறது. எனவே, வியாபாரிகள்மீது சர்க்கார் சுமத்தும் வரிப் பளுவை எதிர்த்துப் போராட அனைவரும் ஒன்று திரள வேண்டும் "

அடுத்து தோழர் அப்துல் கபூர் பேசுகையில், 'சில்லறை வியாபாரிகளின் விற்பனை வரி வரம்பை ரூ. 10,000-த்திலிருந்து ரூ. 30,000 ஆக உயர்த்தவேண்டுமென்ற நமது முக்கியக் கோரிக்கைக்குச் சர்க்கார் செவிசாய்க்கவில்லை. இது பற்றி நாங்கள் மந்திரிக்கு எழுதின கடிதம் ஒன்றுக்குப் பதில் தந்திருக்கிறார்— இந்த ரூ. 10,000 என்ற வரம்பே உங்கள் மீது தயவு வைத்துக் கட்டப்பட்டிருக்கிறது; வரி விசாரணைக் கமிஷன், இந்த வரம்பை ரூ. 5,000 ஆகக் குறைக்கலாம் என்று சிபாரிசு செய்திருக்கிறது. என்றாலும் நாங்கள் செய்யவில்லை' என்று எழுதியிருக்கிறார். ஆனால் வருகிற தேர்தலுக்குப் பிறகு நிச்சயம், இன்று ரூ 10 000 ஆக இருக்கும் இந்த வரம்பு ரூ. 5 000 ஆகக் குறைக்கப்பட்டுவிடும் என்பதை வியாபாரிகள் அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டுகிறேன்' என்று கேட்டுக்கொண்டார்.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு இறக்குமதி வரி விதித்து, பிறகு உள்நாட்டில் அவைகளுக்கு எக்சைஸ் வரி, விற்பனை வரி என்று இரட்டிப்பு வரி விதிப்புகளைக் கண்டித்தும், அவற்றைக் கைவிடுமாறு சர்க்காரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றைப் படிக்க, மக்களின் கையொலியுடன் நிறைவேற்றப்பட்டது.

அடுத்து, தோழர் குப்புசாமி பேசுகையில், 'சர்க்கார் வியாபாரிகளுக்குத் தரும் தொல்லைகளிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள வியாபாரிகள், மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக உங்களிடம் வந்திருக்கின்றனர்; இதுவரையிலும் வியாபாரிகள் தங்கள் குறைகளையெல்லாம் தெரிவித்துப் பயன் இல்லை. இனிமேல் தங்கள் கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றிக்கொள்ள உயிரை விடவும் தயங்கமாட்டார்கள் ; இனிமேலும் இந்தக் கொடுமைகளைச் சகித்துக்கொள்ளமாட்டார்கள்' என்று குறிப்பிட்டார்.

விற்பனை வரி விதிப்புக்கான வரம்பை ரூ. 10,000-த்திலிருந்து 30,000-த்திற்கு உயர்த்துமாறும், விற்பனை வரிப் பதிவுக் கட்டணத்தை ரூ. 7,500-லிருந்து 15,000 - ஆக உயர்த்துமாறும், அரிசி, உணவுத் தானியங்கள் நீங்கலாக மற்ற விவசாயப் பொருள்களுக்கு உடனடியாக ஒரு முனை விற்பனை வரி கொண்டுவர வேண்டும் என்றும் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானத்தை அவர் படிக்க, மக்களின் கையொலியுடன் நிறைவேற்றப்பட்டது.

அடுத்துத் தோழர் எ. பெனிலால் அவர்கள், வியாபாரிகளின் குறைகளை விளக்கியும், வியாபாரிகள் திருடர்கள் என்று கூறப்படுவது போன்றே மற்றத் துறைகளில் ஈடுபட்ட அனைவருமே திருடர்கள்தான் என்பதை எடுத்துக்காட்டியும் பேசியபின் அரிசி, தானியங்கள்மீது விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரியை ரத்து செய்ய சர்க்காரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானத்தை வாசித்தார். பொதுமக்களின் கைதட்டலுக்கிடையே அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்து, தோழர் புண்ணியகோட்டி அவர்கள் பேசுகையில், 'வியாபாரிகள் எந்த அளவுக்கு நியாயமாக நடக்க முயற்சிக்கிறார்களோ, அந்த அளவுக்கு அதிகமாகச் சர்க்கார் அவர்களுக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது' என்று குறிப்பிட்டார்.

அடுத்து, காங்கிரசைச் சேர்ந்த திரு. வெங்கடேசுவர ராவ் பேசுகையில், 'வியாபாரிகள், இந்த சர்க்காருக்குக் கொடுக்கும் வரியை மனசந்தோஷமாகக் கொடுக்கவில்லை; உடம்பில் ஊசியைக் குத்தி இரத்தத்தைச் சொரிவதுபோல், வரியை செலுத்துகின்றனர் ; இப்போதிருக்கிற மந்திரிகளுக்கோ அதிகாரிகளுக்கோ, வியாபாரத் துறையைப்பற்றி எதுவுமே தெரியாது; வெறும் கையெழுத்துமட்டும் போடத் தெரிந்தவர்களாக இருக்கின்றனர். வியாபாரிகள் தொல்லை நீங்க, அவர்கள் ஒன்று சேர்ந்து வரி கொடுப்பதில்லை என்று முடிவு செய்தாகவேண்டும்; அதற்கும் பொதுமக்கள் ஆதரவு தரவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

அடுத்து காங்கிரசைச் சேர்ந்த தோழர் எஸ். பி. கிருஷ்ணன் பேசுகையில், 'வியாபாரிகள் தங்கள் குறைகளைத் தீர்க்க—அதிகாரிகள் கொடுக்கும் தொல்லைகளைத் தீர்க்க ஒன்றுபட்டுப் போராடவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

இறுதியில் தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் வியாபாரிகளின் குறைகளைப் போக்க மேற்கொள்ளும் இயக்கத்திற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தனது முழு ஆதரவையும் தரும் என்று தெரிவித்தார். அப்போது கூடியிருந்த வியாபாரத் துறையிலீடுபட்ட மக்களனைவரும் கையொலி எழுப்பி தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர்.

இறுதியில், தோழர் அப்துல் கபூர் நன்றி கூறுகையில், 'வியாபாரிகள் கோரிக்கைக்குத் தி. மு. கழகம் தனது ஆதரவைத் தருவது எங்களுக்கெல்லாம் மிகுந்த ஆறுதல் அளிப்பதாக இருக்கிறது; அவர்களுக்கு வியாபாரிகள் சங்கச் சார்பில் நன்றி கூறிக் கொள்கிறேன்' என்று குறிப்பிட்டார்.

கூட்டம் இரவு $8\frac{1}{2}$ மணியளவில் இனிது முடிவுற்றது.

# நகரசபைகள் சர்க்காரிடம் உதவி எதிர்பார்க்கக்கூடாதாம்!

மட்டஞ்சேரி டிச. 28 - ஸ்தல ஸ்தாபனங்கள் சர்க்காரிடமிருந்து உதவி எதிர்பார்க்கக் கூடாதாம்!

கேரள மாநிலத்தில் உள்ள ஸ்தல ஸ்தாபனங்கள் சர்க்காரிடம் கோரியுள்ள உதவி அளவிட முடியாதது என்றும், அவ்வளவு உதவியையும் செய்வதற்கு சர்க்காரிடம் பணம் இல்லை என்றும், சர்க்கார் கஜானா ஒரு அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டதே என்றும் கவர்னர் பி. இராமகிருஷ்ணராவ், மட்டஞ்சேரி நகரசபை தனக்குத் தந்த வரவேற்பு ஒன்றுக்கு பதிலளிக்கையில் கூறியிருக்கிறார்.

நகரசபைகள், தங்களுக்குத் தேவைப்படும் நிதியைத் தாங்களே திரட்டிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினாராம்!

## முழுத் தமிழ் மாநிலம் அமையவில்லையாம்!

### சட்டசபையில் அமைச்சர் ஒப்புகிறார்

சென்னை, டிச. 27—'புதிய மாநில அமைப்பு நாள் மற்ற மாநிலங்களில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டபோது, சென்னையில் மட்டும் ஏன் கொண்டாடப்படவில்லை?' என்று சட்டசபையில் கேட்கப்பட்டதோர் கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் சுப்பிரமணியம், 'சென்னை மாநிலத்துடன் சேரவேண்டிய பகுதிகள் இன்னும் சேராமல் உள்ளது; இந்த நிலையில், புதிய மாநிலம் ஏற்பட்டதை நவ. 1-ந் தேதியன்று கொண்டாட வேண்டியதில்லை என்று சென்னை அரசாங்கம் கருதியது' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## தேங்காய்க்கு விற்பனை வரி ரத்தாகுமா?

சென்னை, டிச. 27—'தேங்காயும் ஒரு அழுகும் பொருளாதலால், அதற்கு விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரியை ரத்து செய்வதுபற்றி அரசாங்கம் யோசனை செய்துவருகிறது' என்று சட்டசபையில் அமைச்சர் மாணிக்கவேலர் கூறியுள்ளார்.

## 20,000 ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் வசதி

சென்னை, டிச. 27—வைகை ஆற்றின் தண்ணீர் தேக்கம் கட்டப்பட்டு முடிந்தவுடன் 20,000 ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர் வசதி கிடைக்குமென்று பொது நிர்மாண வேலை அமைச்சர் இராமநாதபுரம் இராஜா தெரிவித்துள்ளார்.

## தமிழ் ஆட்சி மொழி மசோதா

### மேல் சபையிலும் நிறைவேறியது

சென்னை, டிச. 28—தமிழை ஆட்சி மொழியாக்கும் மசோதா மேல் சபையிலும் ஏகமனதாக நிறைவேறியது.

"இடைக்கால தமிழ் மொழி அரசுரிமை இழந்து பணிப் பெண்ணாக இருந்த நிலை மாறி, இன்று தமிழன்னை அரசுரிமை பெறுவது, நாம் மற்ற துறைகளில் முன்னேறியுள்ளதற்கு ஒத்ததாகும்," என்று நிதி அமைச்சர் முன்மொழிந்துள்ளார்.

## தேர்தல் தேதிகள்!

புதுடில்லி, டிச 29—பொதுத் தேர்தலுக்கான தேதிகளைக் குறிப்பிட்டு இந்தியக் குடியரசுத் தலைவர், மாநில கவர்னர்கள் அறிவிப்புகள் 1957 சனவரி 19-ந் தேதி வெளிவருமென்று கருதப்படுகிறது.

அநேகமாக நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கு சனவரி 29; பரிசீலனை 31; வாபஸ் பெற பிப்ரவரி 3 - ஆகிய தேதிகள் இறுதி நாட்களாகக் குறிப்பிடப்படலாம் என்று தெரிய வருகிறது.

பொதுத் தேர்தல், முன்பு குறிப்பிட்டபடி, பிப்ரவரி 25 முதல் மார்ச் 12-ந் தேதி வரை நடைபெறும்.

## அனுதாபக் கூட்டம்

1—1—57 மாலை 6 மணிக்கு, சென்னை — ஓட்டேரி வாழைமாநகரில், டாக்டர் அம்பேத்கார் மறைவு குறித்துத் தோழர் ஏ. எம். வரதராசன் தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெறும். தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, தோழியர் சத்தியவாணி-முத்து ஆகியோர் பேசுவர்.

## பஞ்சப்படி உயர்வு 'நர்சு'களுக்கும் உண்டு

சென்னை, டிச. 28—'அண்மையில் சர்க்கார் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பஞ்சப்படி உயர்வு, மருத்துவ மனைகளில் பணி புரியும் நர்சுகளுக்கும் கிடைக்கும்' என்று மந்திரி மாணிக்கவேலர் மேல் (சட்ட)சபையில் கூறியிருக்கிறார்.

## மைசூர் மாநிலத்திற்கு ரூ. 45 இலட்சம் கடன்

பெங்களூர், டிச. 29—கோலார் தங்கவயலை தேசியமயமாக்கியதை யொட்டி மத்திய அரசாங்கம், மைசூர் மாநில அரசுக்கு ரூ. 45 இலட்சம் கடனுதவி அளித்துள்ளது. $4\frac{1}{2}$ சதவிகிதம் வட்டியுடன் இந்தக் கடனை 15 ஆண்டு காலத்தில் திருப்பித் தந்துவிட வேண்டும்.

## ஆட்சி மொழிக் குழு அறிக்கை ஒத்திவைப்பு

புதுடில்லி, டிச. 27—மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஆட்சிமொழிக் குழுவின் அறிக்கை வெளியிடப்படுவதை அடுத்த பாராளுமன்றக் கூட்டம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது

## ஐசனோவர் இந்தியாவிற்கு வருகை தருவாராம்!

புதுடில்லி, டிச. 28—அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் பண்டித நேருவின் அழைப்புக்கிணங்க, அடுத்த ஆண்டில் இந்தியாவிற்கு வருகை தரச் சம்மதித்துள்ளாராம்.

## கழகக் கூட்டங்கள்

★

பாப்பாரப்பட்டி:
காந்தியார் சதுக்கத்தில்
31—12—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: க. இராசகோபால்
பேசுபவர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி

★

மேல்பட்டாம்பாக்கம்:
திரௌபதி அம்மன்கோவில் திடலில்
31—12—56 மாலை 6 மணிக்கு
தலைவர்:
ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.
பேசுவோர்:
கி. மனோகரன்
கிருஷ்ணமூர்த்தி
பாலவேலாயுதம்

★

குறிஞ்சிப்பாடி:
1—1—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: வைத்தியலிங்கம்
பேசுவோர்:
கி. மனோகரன்
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
கிருஷ்ணமூர்த்தி

★

குளித்தலை:
வ. உ. சி. சதுக்கத்தில்
1—1—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: அம்பில் - தருமலிங்கம்
பேசுவோர்:
அண்ணா
என். வி. நடராசன்
தி. வீ. முத்துகிருட்டிணன்
[பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்களிடம் தேர்தல் நிதி அளிக்கப்படும்.]

★

கரிசல்குளம்:
தி. மு. கழகத் துவக்க விழா
1—1—57 இரவு 8 மணிக்கு
தலைவர்: டபிள்யு. டி. துரைசாமி
பேசுவோர்:
ஜோசப்
எஸ். கலிங்கன்
[அன்று இரவு உதயசூரியன் நாடக மன்றத்தினர் நடிக்கும் 'மறுமணம்' நாடகம் நடைபெறும்.]

## தமிழ் டைப்ரைட்டர் எழுத்துப் பலகை

சென்னை, டிச. 28—சென்னை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட விசேடக் குழுவின் முடிவுப்படி தயாரிக்கப்பட்டுள்ள தமிழ் டைப்ரைட்டர் கீ - போர்டு (எழுத்துப் பலகை) அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

இந்த எழுத்துப் பலகையில் 4 வரிசைகள் இருக்கும்; மொத்தம் 46 எழுத்துக்கள் இடம் பெறும்.

***********************************

# தி. மு. க. தேர்தல் நிதி நாடகங்கள்

அண்ணா அவர்களும் ... கழகத் தோழர்களும் நடிக்கும்

# சந்திரோதயம்

ஜன. 3: கோவை நகர்
" 15: பூந்தமல்லி (செங்கற்பட்டு மாவட்டம்)
" 16: காஞ்சிபுரம்
ஜன. 17: போளூர் வ. ஆ.
" 18: சேலம் நகர்
" 19: திருச்சி நகர்
" 20: மதுரை நகர்

மேற்கண்ட தி. மு. க. கிளைகளின் நிர்வாகிகள், நாடக ஏற்பாட்டினைச் சிறப்புற நடத்திக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் முயற்சி இனிது நிறைவேற அனைவரும் பேராதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

***********************************


## பார்க்பேர் பொருட்காட்சி: 56-57

### சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

30—12—56 ஞாயிறு பகல் 2 மணிக்கு
விளையாட்டுப் பகுதித் தலைவர்:
வி. ஏ. ஜெயவந்த் (Traffic Manager, M. P. T.)
ரேக்ளா, சைக்கிள், ரிக்ஷா ஓட்டப்பந்தயங்களும் சர்க்கஸ், தந்திரக்காட்சி, பம்பாய்நடனம், ஓவியக்கலை—இன்னும் பல

★

சகுந்தலா கலை அரங்கில்—மாலை 6-மணிக்கு
நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி தலைமையில்
குமாரி டி. கே. நவநீதம் & டி. கே. காந்தா குழுவினரின்
**பரத நாட்டியம் & ஓரியண்டல் நடனங்கள்**

31—12—56 திங்கள் பகல் 2 மணிக்கு
விளையாட்டுப் பகுதித் தலைவர்:
அமைச்சர் சண்முகராஜேசுவர சேதுபதி
மாலை 6-மணிக்கு—சகுந்தலா கலை அரங்கில்
கண்ணன் கலா மன்றத்தினர் அளிக்கும்
**'ரிவால்வர்'** தமிழ் சமூக நாடகம்

எம். எஸ். மோகன்—காண்டிராக்டர்


## அண்ணா என். வி. நடராசன்

சுற்றுப்பயண நிகழ்ச்சி:

★

டிசம்பர்
30: காலை 8-30 மணி—சேலம் -அம்மாப்பேட்டைத் தி. மு. கழகக் கட்டிடம் (இருளப்பன் நினைவு நிலயம்) திறப்பு விழா;
காலை 10மணி—பொதுக் குழுக் கூட்டம்;
மாலை 6 மணி—பொதுக் கூட்டம்;
31: மாலை 6 மணி—பொறையார் நிதி அளிப்புக் கூட்டம்;
ஜனவரி
1: மாலை—குளித்தலை நிதி அளிப்புக் கூட்டம்;
2: காலை 10 மணி-திருப்பூர் நிதிஅளிப்புக் கூட்டம்

## பொறையாறில் தி.மு. கழக தேர்தல் நிதி அளிப்பு விழா

31—12—56 மாலை 6 மணிக்கு பொறையார் வட்ட தி. மு. கழகக் கிளைகள் சார்பில், பொறையார் பத்தாய் மரைக்காயர் தெருவில் தோழர் வெ சௌந்தரராசன் தலைமையில் தி மு கழகத் தேர்தல் நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

அண்ணா, துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர் பேசுவர்.

## கோபி வட்ட தி. மு. க. குழு அமைப்புக் கூட்டம்

'31-12-56 இரவு 10 மணிக்கு, கோபி முசாபரி பங்களாவில் கோபி வட்டத் தி. மு. கழகக் குழு அமைப்புக் கூட்டம் நடைபெறும். கோபி வட்டக் கிளைக் கழகப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளக் கோருகிறேன்" என்று தி. மு. கழகச் செயலாளர் எஸ். எம். ஷெரீப் அறிவிக்கிறார்

## சென்னை—வள்ளுவர் வாசுகி நூல் நிலயத் திறப்பு

1—1—57 மாலை 6 மணிக்கு, சென்னை 16-வது வட்டம் பெருமாள் கோயில் தோட்டத் தெரு எண் 8/1 இல்லத்தில் மேற்படி நூல்நிலயத் திறப்பு விழா நடைபெறும். தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் தலைமை வகிப்பார்.

இவ்வாண்டு இறுதிக்குள்ளாக இந்தியா, வெளிநாடுகளிலிருந்து, மொத்தம் 18 இலட்சம் டன் உணவுத் தானியங்களை இறக்குமதி செய்திருக்கும் என நம்பப்படுகிறது.

## தி. மு. கழகத் தேர்தல் நிதி ஊர்வலம்

30—12—56 காலை 8 மணிக்கு, சென்னை 44-வது வட்டத் தி. மு. கழகப் பணிமனையிலிருந்து தோழர் ஆர். அறிவழகன் தலைமையில் தேர்தல் நிதி திரட்ட தோழர்கள் ஊர்வலமாக வட்ட முழுமையும் வருவார்கள். கழகத் தோழர்களும் அனுதாபிகளும் குறித்த நேரத்தில் பணிமனையில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## பர்மா சுதந்திர தின விழா

4—1—57 காலை 9 மணிக்கு, பர்மா தெங்காஞ்சூன் சண்முகம் தோட்டத்திலுள்ள தமிழர் படிப்பகத்தில், பர்மாவின் 9-வது சுதந்திர தின விழா, தோழர் கே. எம. கணபதி தலைமையில் நடைபெறும். தோழர் பி. எஸ். இராமுவின் இசை நிகழ்ச்சி நடைபெறும். தோழர்கள் கா. மணிமொழியன், கே. ஏ. கண்ணன், மொழிமாறன், சொ. நா. சுப்பையா ஆகியோர் பேசுவர்.

## திருக்குறள் அதிகார விளக்கம்

30—12—56 காலை 10 மணியளவில், சென்னை — வண்ணை தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில் இளைஞர் கழகச் சார்பில் திருக்குறளில் 'அழுக்காறாமை' என்ற அதிகாரத்தை திரு. தணிகை உலகநாதர் அவர்கள் விளக்கிச் சொற்பொழிவாற்றுவார்.

## சென்னை—ஊ. பு. அ. சௌந்திர பாண்டியனர் நினைவுப் படிப்பகச் செயற்குழு உறுப்பினர்களுக்கு:

30—12—56 மாலை 4 மணியளவில், சென்னை—சூளை மேற்படி படிப்பகத்தில், தோழர் டி. கே. இளங்கோ தலைமையில் படிப்பகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். வரவு-செலவு கணக்கு பரிசீலனை, கூட்டம் அமைத்தல் ஆகிய பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## சொற்பயிற்சிக் கூட்டம்

30—12—56 மாலை 6 மணிக்கு, வடசென்னை தாளமுத்து நடராசன் முன்னேற்ற மன்றப் பணிமனையில்(மீனாட்சியம்மன்பேட்டை இராயபுரம்) தோழியர் ஜே. பி. அமுதா தலைமையில், தோழர்கள் அன்புரோசு, இளஞ்சேரன், தோழியர் முத்து ஆகியோர் 'தீண்டாமை' எனும் தலைப்பில் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ.